DINAMALAR 24 JAN 09

# திதி கொடுப்பது யாருக்காக



இறந்தவர்களுக்கு திதி போன்றவை செய்யலாமா என்றால் செய்யலாம். எதற்காக? உங்கள் தாத்தாவோ, அப்பாவோ இறந்து விட்டார்கள். அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் அவர்களை நீங்கள் விரும்பலாம், விரும்பாமலும் இருக்கலாம். ஆனால், இந்த உடலைக் கொடுத்தவர்கள் அவர்கள் தானே. நாம் உலகில் வாழ்வதற்கு முக்கியமான உடலைக் கொடுத்ததற்கு இதயத்தில் நன்றியுணர்வு காட்ட வேண்டாமா?

அவர்களை நீங்கள் ஆணியில் அடித்து சுவற்றில் தொங்க விட்டு மறந்துவிட்டீர்கள். குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒருமுறையாவது அவர்களின் நினைவாக ஏதாவது செய்ய வேண்டும். அவர்களின் நினைவு நாளில் காகம், பசு போன்றவற்றிற்கு உணவிடுவது மிகவும் நல்லது. அவ்வாறு செய்வது உங்களுக்கு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும்.

உணவு தேவைப்படும் ஏழை எளியவர்கள் 50, 100 பேருக்கு நீங்கள் உணவளிக்கலாம். இதற்கு உறவினர்களை மட்டுமே அழைக்க வேண்டும் என்பதில்லை. உங்கள் கையால் நீங்களே சமைத்து ஏழைகளுக்குப் பரிமாறுங்கள். நீங்களும் சாப்பிடுங்கள். இப்படி செய்தால், இறந்தவர்களின் ஆத்மா சாந்தி அடையுமோ, அடையாதோ தெரியாது. ஆனால்,நிச்சயம் உங்களின் ஆத்மா சாந்தி பெறும். அதுதான் முக்கியமானது. வாழ்க்கை முடிந்தவர்களின் ஆத்மாவைப் பற்றிச் சிந்திப்பதைவிட உங்களின் ஆத்மா நன்மை பெறும்படி எதையாவது செய்யுங்கள். இதுபோன்ற பணிகளைத் தான் நீங்கள் செய்ய வேண்டும். இந்த நோக்கத்தில்தான் முற்காலத்தில் சடங்குகள் உருவாக்கப்பட்டன. ஆனால், காலப்போக்கில் எல்லாம் மாறிவிட்டன.

-சத்குரு ஜக்கி வாசுதேவ்